**எலஹர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எலஹர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நானாவித வைப்புக்கள் ரூபா 65,000 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மடுதமன மற்றும் கொந்துருவாவ நீர் செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 160,000 மற்றும் ரூபா 100,000 பெறுமதியான இரண்டு நீர்ப்பம்பிகளின் பெறுமதியை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு பதிலாக கையிலுள்ள இருப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன்களுக்காக 2017 திசெம்பர் மாதத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 87,078 தொகையான கடன் தவணை மற்றும் அதற்குரிய வட்டியானது நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) புரநெகும செயற்திட்டத்திலிருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 282,450 பெறுமதியான ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் ரூபா 75,800 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பக்கமுண சிறுவர் பூங்காவிற்காக சபையின் பங்களிப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் புரநெகும செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த விளையாட்டு உபகரணங்களின் பெறுமதி முறையே ரூபா 2,232,400 மற்றும் ரூபா 3,791,000 ஆகியன மூலதனமாக்கப்பட்டிக்கவில்லை.

(ஊ) 06 நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 15,010,104 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தியபெதும தெஹிவத்த 08 கடைகளுக்காக இழுக்கும் கதவுகளை பொருத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 154,222 மற்றும் 08 கடைகளின் பெறுமதியும் கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 217,661 தொகையான செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புகள்

தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது பக்கமூண வாரச் சந்தையின் கூரையை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,250,523 தொகை செலுத்தப்பட்டிராமையால் அந்த நிறுவனம் 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஹிங்குரன்கொட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தொடர்ந்திருந்தமையால், அதன் அடிப்படையில் நிகழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 கணக்கு விடயங்களுக்குரிய பெறுமதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 874,855 தொகையான வேறுபாடு நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 4 பேரேட்டுக் கணக்குகளின் மீதிகள் மற்றும் அதற்குரிய நிதிக்கூற்றிலுள்ள மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 5,841,595 ஆன இணக்கமின்மைகள் நிலவின.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் 03 கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புகளுக்கமைவான மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 5,246,208 ஆன இணக்கமின்மைகள் நிலவின.

(ஈ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கில் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 112,672 ஆன வேறுபாடொன்று நிலவியது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

முற்பண வருமானமாக சுமார் 10 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் காண்பிக்கப்படுகின்ற ரூபா 770,026 தொகையை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையால் ரூபா 356,088,543 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 134(i) ஆம் பிரிவு | சபையின் அதிகார எல்லையினுள் அமைந்துள்ள அபிவிருத்தியடைந்த கிராமங்கள் அவ்வப்போது இனங்காணப்பட வேண்டிய போதிலும், சபை அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டினுள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாத 30 தொழில்சாலைகளுக்கு வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 06 சந்தர்ப்பங்களின் பேது வழங்கப்பட்ட ரூபா 70,000 முற்பணத்தை தீர்ப்பதற்கு 01 முதல் 08 வருடங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 751 | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 394,745 பெறுமதியான மின்சார உபகரணங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 87,128 பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் இருப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 751(i) | களஞ்சியப் பொறுப்பாளரின் பதிவேடுகள் மற்றும் அறிக்கை குறிப்புகள் பரிசோதிக்கப்பட்டு சரியானதென பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 1647 (அ) | சபைக்கு சொந்தமான 18 வாகனங்கள் தொடர்பில் பல வருடங்களாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

(ஈ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

| | |
|---|---|
| (i) 2.11.2 வழிகாட்டி | பெறுகை குழுவின் அங்கத்தவர்களின் வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2.11.3 வழிகாட்டி | குழுக்கூட்டங்களின் அறிக்கைகள் மற்றும் தீர்மானங்களை உள்ளடக்கி சபையினால் முறையாகவும் நாளதுவரையாகவும் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. |

(உ) சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள்

| | |
|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | தகுதிவாய்ந்த இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாது சபைக்கு சொந்தமான வாகனமொன்றின் பழுதுபார்த்தலுக்காக ரூபா 515,050 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான கணனி மற்றும் கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் என்சீபீ/எல்பீ/எஸ்/4/12 ஆம் இலக்க கடிதம் | தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லம் 2015 திசெம்பர் மாதம் முதல் மாதமொன்றிற்கு 150 லீட்டர் ஆகக்கூடிய எரிபொருள் எல்லைக்கு உள்ளடங்களாக செயலாளர்களுக்கு பயன்படுத்தக்கூடிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் 3,200 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 304,000 தொகையான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,792,441 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 638,061 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,004,277 | 576,184 | 428,293 | 997,306 | 1,036,577 | 753,625 | 610,657 | 849,415 |
| (ii) | வாடகை | 467,700 | 1,272,000 | 671,700 | 790,835 | 467,700 | 496,037 | 527,769 | 190,535 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 340,000 | 288,275 | 288,275 | - | 175,000 | 316,310 | 316,310 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,619,800 | 14,348,040 | 14,348,039 | - | 8,638,350 | 9,161,473 | 9,161,473, | - |
| | மொத்தம் | 15,431,777 | 16,484,499 | 15,736,307 | 1,788,141 | 10,317,627 | 10,727,445 | 10,616,209 | 1,039,950 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 849,415 தொகையான நிலுவை வீதவரி மற்றும் வரி வருமானம் மற்றும் ரூபா 190,353 தொகையான வாடகை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியளவில தொடர்ந்தும் முறையே 16 சதவீதத்தால் மற்றும் 315 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 குத்தகை வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 6 கடைகள் அவற்றின் உடன்படிக்கை செய்த வாடகையாளர்களால் இடைக் குத்தகைக்கு வழங்கப்பட்டமையின் மூலம் மாதாந்தம் ரூபா 111,500 தொகை ஈட்டப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) அத்தனகடவல 13 கடைகளுக்குரிய தரைக் கூலி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 யூலை 25 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவை கடை வாடகையான ரூபா 469,775 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டளவில் 15 மருத்துவர்கள், 10 சட்டத்தரணிகள் மற்றும் சில நிதிக் கம்பனிகள் தமது வியாபார மற்றும் தொழில் நடவடிக்கைகளை சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொண்டிருந்த போதிலும், இடைக்கால

சட்டங்களை அங்கீகரித்து அந்த வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் தொடர்பில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்தியிருந்த சில நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த போதிலும், பல்வேறு வியாபார நிறுவனங்களின் பெருந்தொகையான அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பில் வருடாந்த மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 32 தொழிற்சாலைகள் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பங்களை முன்வைத்திருந்த போதிலும், பொருத்தமான நிறுவனங்களை இனங்கண்டு குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சுற்றுலாச் சபையின் பதிவு செய்திருந்த மற்றும் அதிகாரப் பிரதேசத்தினுள் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த தனியார் வதிவிடமொன்றிடமிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவிற்கமைய முன்னைய ஆண்டின் வருமானத்தில் சபைக்கு கிடைக்க வேண்டிய 1 சதவீதம் வரையிலான தொகையினை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அந்த நிறுவனத்தின் வருடாந்த புரள்வு தொடர்பான தகவல்களும் நிறுவனத்திடம் காணப்படவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான JCB இயந்திரம் மீளாய்வாண்டின் போது 11 நாட்களினுள் 66.4 மீட்டர் மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 232,400 தொகை 2018 யூன் 08 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,250,830 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 655,803 தொகையும் காணப்பட்டன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

---------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் இனங்காணப்பட்டிராததுடன், சபையினால் 04 உப விதிகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தன.

**(ஆ) நடைமுறைப்படுத்தப்படாத எண்ணக்கருக்கள்**

---------------------------------------------------------------------------

கிராமிய பிரதேசங்களின் வீதிகளில் 1000 கிலோ மீட்டர்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் உடன்படிக்கை பெறுமதி ரூபா 1,260,447 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

சபையின் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான இடை விதிகள் அங்கீகரிக்கப்பட்டிராமையால் அவற்றின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டிய பணிகள் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாது பக்கமுண தம்புள்ள பிரதான வீதிக்கு அருகில் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான வெற்றுக் காணியொன்றில் கொட்டப்பட்டிருந்தன.

(ii) அதிகாரப் பிரதேசத்தில் பல வருடங்களுக்கு முன்னர் சேகரிக்கப்பட்டிருந்த குப்பைகளில் அடங்கியுள்ள பிளாஸ்திக் போத்தல்கள் மற்றும் ஏனைய பிளாஸ்திக் குப்பைகளின் ஒரு பகுதி பைகளில் இடப்பட்டு பிரதேச சபையின் வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்ததுடன், மீள்சுழற்சிக்குட்படுத்தல் அல்லது அகற்றுதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) தியபெதும மற்றும் அத்தனகடவல பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தாது மின்னேரியா வனப் பூங்காவின் உள்ளக பிரதேசத்தில் எடுத்து செல்லப்பட்டு இடப்பட்டமையால் காட்டு யானைகள் அந்த பொலித்தீன்கள் உள்ளடங்கிய குப்பைகளை உட்கொள்ளுகின்றமையால் அது காட்டு விலங்குகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தலொன்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

----------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக எவ்விதமான தெளிவும் சபைக்கு இல்லாதிருந்ததுடன், அதன் காரணமாக மேற்படி ஆயத்தமாவதற்கு தேவையான, நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல், இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காணல், மேற்படி பணிகளுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்து செயல்நடவடிக்கைத் திட்டத்தில்

உள்ளடக்கி தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை இனங்காணல், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல் தொடர்பில் அக்கறை கொண்ட தரப்பினரை (Stake Holders) இனங்காணல், இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற எவ்விதமான செயற்பாடும் 2018 மே 02 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 53,383 தொகையான பிணை வைப்புகள் மற்றும் அதற்குரிய வட்டியை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குதல் பொருத்தமற்றதென தளப் பரிசோதனை உத்தியோகத்தர்களால் தீர்மானிக்கப்பட்டிருந்த சீமெந்து கற்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று பல வருடங்களாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பில் போதியளவான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பக்கமுண சிறுவர் பூங்காவிற்காக சபையின் பங்களிப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,113,650 பெறுமதியான 18 விளையாட்டு உபகரணங்கள் மற்றும் புரநெகும செயற்திட்டத்தின் மூலம் கிடைத்திருந்த ரூபா 3,791,000 பெறுமதியான 9 விளையாட்டு உபகரணங்கள் பொருட்பதிவேட்டு புத்தகத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தகவல்களுக்கமைய இரண்டாம் நிலையிலுள்ள 04 பதவிகளின் மிகையொன்றும், 08 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன், ஆரம்ப மட்டத்தில் 11 பதவிகளின் மிகையொன்றும் 04 பதவிகளின் வெற்றிடங்களும் நிலவியது.

(ஆ) பதவியணியினர் தகவல்களுக்கமைய 04 சாரதி பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள மூன்று நிரந்தர சாரதிகளுக்கு மேலதிகமாக 06 அமைய ஊழியர்கள் சாரதிகளாக அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) இரண்டாம் நிலையின் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 01 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி மற்றும் 01 நூலகர் பதவியும் வெற்றிடமாக காணப்பட்டது.

(ஈ) ஆரம்ப நிலையில் 04 வீதி தொழிலாளர்கள், 03 சுகாதார ஊழியர்கள், 02 நீர் மற்றும் காவற்காரர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) 01 உதவி கணக்கு உத்தியோகத்தர் பதவி மற்றும் 01 தொழில்நுட்ப உதவியாளர் பதவி ஆகியவற்றுக்காக இரு நபர்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஆட்சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த

போதிலும், அந்த பதவிகளை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான தெஹிவத்த காணியின் கடையினை நிர்மாணிப்பதற்காக 9 கேள்விதாரர்களால் ரூபா 1,065,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் காணித்துண்டுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹிவத்தயிலுள்ள 16 கடைகள் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 13,004,000 தொகைக்கு கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், அந்த பணத்தில் ரூபா 4,595,250 தொகை நிலுவையாக காணப்பட்டது. இந்த 16 கடைகளுக்காக மின்சாரம் வழங்கப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சுமார் 05 வருட காலமாக வாடகையாக சபைக்கு சேகரிக்கக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் 08 ஆந்திகதி வரையிலும் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற சொத்துக்கள்**

(i) சபைக்கு சொந்தமான அரிசி மா தயாரிக்கும் நிலையத்திற்குரிய ரூபா 522,500 பெறுமதியான உபகரணத் தொகுதியொன்று 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டது.

(ii) சேதமடைந்துள்ள கெப் வண்டி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டதுடன், கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2016 ஆம் ஆண்டின் போது நீர்த் தாங்கியை வாடகைக்கு வழங்கியமைக்காக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 156,000 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டினுள் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.7 பெறுகைகள்

#### 3.7.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

**(அ)** மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

**(ஆ) தொலைப்பிரயாண பேரூந்து தரிப்பிடம் மற்றும் வியாபாரக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

செயற்திட்டம் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் கருங்கல்லை உடைத்து அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் காணியில் அமைந்துள்ள கருங்கல்லினை உடைத்து அகற்றுவதற்காக ரூபா 13,163,228 செலவிடப்பட்டிருந்த போதிலும், பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தொலை தூர பேரூந்துகளை நிறுத்துவதற்காக எலஹர நானாவித சேவைகள் கூட்டுறவு சங்கத்திற்குரிய காணியொன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 50 மில்லியன் செலவிடப்பட்டு பேரூந்து தரிப்பிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட மொத்த பணமும் விளைவற்றதாக இருந்தது. மேலும், வெடி பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 595,000 தொகையான முற்பணத் தொகையில் ரூபா 225,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 03 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையின் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளக கணக்காய்வொன்றினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடைமுறைப்படுத்தல்

வட மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரின் என்சீபீ/சீஎஸ்/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் 3 வருமான விடயங்களுக்குரிய உள்ளபடியான வருமானம் மற்றும் மதிப்பிடப்பட்ட வருமானம் ஆகியவற்றுக்கிடையே 27 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன், 4 செலவின விடயங்களின் 30 சதவீதம் முதல் 1,107 சதவீதம் வரையான வீச்சிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டன.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளிலான குறைபாடுகள் தொடர்பில் சபை கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | அனைத்து நிலையான சொத்துக்களையும் பதிவுக்குட்படுத்தி சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | சபை பயன்படுத்தும் அனைத்து சொத்துக்களினதும் உரித்து கையேற்கப்பட்டிராமை. |
| (ஆ) கணக்கீடு | (i) | புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் நாளதுவரையாக பேணப்பட்டிராமை. |
| | (ii) | பணம் சேகரித்தல் மற்றும் கணக்கு வைத்தல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படாமை. |
| (இ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானத்தை அறவிடாமை. |
| | (ii) | குத்தகை ஒப்பந்தங்கள் முறையற்றிருத்தல். |
| | (iii) | உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமை. |
| (இ) கடன் பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | சரியாக கணக்கு வைக்காமை |
| | (ii) | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தீர்வு செய்யப்படாமை. |
| | (iii) | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டு சமர்ப்பிக்காமை. |
| (உ) வாகனக் கட்டுப்பாடு | (i) | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்படாமை. |
| | (ii) | வாகனங்கள் தொடர்பான மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளாமை. |
| | (iii) | வாகனங்கள் தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று நிறுவப்பட்டிராமை. |